10.09.2024

O.S.No.115/2018

வா.சா.1.திரு.ராமகிருஷ்ணன் த.பெ.சிந்துவெட்டி என்ற கருப்பணன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு** விசாரணை

1. நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா சொத்துக்கள் எங்களுக்கு பாகபிரிவினை மூலம் கிடைக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். 1980ம் வருடம் பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்ட போது நான் இளவராக இருந்தேன் என்றால் சரிதான். அந்த பாகபிரிவினை பத்திரத்தில் நான் மற்றும் 2 சகோதரர்களுக்கிடையே சம பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 1980ம் ஆண்டு பாகபிரிவினைக்கு பின்னிட்டு அவரவர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை சகோதரர்களாகிய நாங்கள் மூவரும் விவசாயம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினை பத்திரத்தின் படி அவரவர் பாகத்திற்கு வாய்க்கால் விடப்பட்டு, அதன் மூலம் தண்ணீர் பாய்ச்சி விவசாயம் நடைபெற்றது என்றால் சரிதான். ஆனால் 1ம் பிரதிவாதி அவரது பாக இடத்திற்குள் இருந்த வாய்க்காலை அப்போதே அழித்து விட்டார். அவ்வாறு வாய்க்காலை எந்த ஆண்டு அழித்து விட்டார் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், 2008ம் ஆண்டு வாக்கில் நான் வெளிநாட்டில் இருந்த போதே அவர் வாய்க்காலை அழித்துவிட்டார். பொது வாய்க்காலை 1ம் பிரதிவாதி அழிக்கவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல.

2. பிராதுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி வரைபடம் என்னால் தயார் செய்யப்பட்டது என்றாலும், வருவாய் துறையினரால் வழங்கப்பட்ட ஆவணம் அல்ல சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் அவரவர் பாகத்தில் உள்ள நிலத்திற்கு பொதுவாக சர்வே எண்.203/4Cல் உள்ள வாய்க்காலில் இருந்து தண்ணீர் பாய்ச்சி பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என 1980ம் வருட பாகபத்திரத்தில் காட்டப்பட்டுள்ளதாக நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். 1980ம் ஆண்டே சர்வே எண்.203/4Cல் வாய்க்கால் இருந்தது என்றால் சரிதான், அதில் தான் எனது மற்றொரு மூத்த சகோதரர் தண்ணீரை அவரது வயலுக்கு கொண்டு சென்றார், அவரிடம் இருந்து நான் அந்த சொத்தினை எனது மனைவி பெயரில் வாங்கிய பின்புதான் அந்த வாய்க்காலை 1ம் பிரதிவாதி அழித்துவிட்டார். சர்வே எண்.203/4Cல் கட்டுப்பட்ட கிணற்றுக்கு மின் இணைப்பு முதலில் என் தந்தை பெயரில் இருந்தது என்றால் சரிதான்.

3. அந்த மின் இணைப்பினை இலவச மின் இணைப்பாக கருதுவதற்கு நானும், எனது மற்றொரு சகோதரரும் சேர்ந்து சம்மதம் எழுதிக்கொடுத்த பின்புதான் 1ம் பிரதிவாதி பெயருக்கு மாற்றப்பட்டது என்றால் சரியல்ல. நான், எனது பாக சொத்தில் தனியாக கிணறு தோண்டி உள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.203/4Cல் கட்டுப்பட்ட பொது கிணற்றிற்கும், எனது பாகத்தில் உள்ள கிணற்றிற்கும் சுமார் 100 அடி தூரம் இருக்கும். பொது கிணற்றினை விட, எனது கிணறு அகலமான கிணறு என்றால் சரிதான். நான், தனியாக கிணறு வெட்டிய பின்பு பொதுக்கிணற்றில் நான் புழங்கவில்லை என்றாலும், அதற்கான

செலவுகளை நான் மேற்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. பொதுக்கிணற்றினை 1ம் பிரதிவாதியே வைத்துக்கொள்ள சொல்லி அதற்கு ஒரு விலைபேசி நானும், 1ம்பிரதிவாதியும் ஒரு ஒப்பந்தம் போட்டுக்கொண்டோம் என்றால் சரிதான். அந்த ஒப்பந்தபடி மொத்த தொகை ரூபாய்.2,75,000/- என முடிவு செய்து அட்வான்ஸ் தொகையான ரூபாய்.10,000/- நான் பெற்றுக்கொண்டேன், ஆனால் அந்த ஒப்பந்த படி 1ம் பிரதிவாதி நடந்து கொள்ளவில்லை.

4. பொது கிணற்றினை விட நான் ஆழமாக கிணறு தோண்டியதால் பொது கிணற்றில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு, 1ம் பிரதிவாதிக்கு விவசாய பாதிப்பு ஏற்பட்டதால், அவரால் ஒப்பந்தபடி நடந்து கொள்ள முடியவில்லை என்றால் சரியல்ல. நான் 1980ம் ஆண்டு பாகபிரிவினை பத்திரத்தினை மீறி ஏற்கனவே உள்ள வாய்க்காலை தவிர்த்து, வேறு வாய்க்கால் கோருகிறேன் என்றால் சரியல்ல. 17.04.2018 தேதியில் காலையில் தாவா கிணற்றில் இருந்து வாதிகளாகிய நாங்கள் தண்ணீர் கொண்டு செல்ல முயன்ற போது பிரதிவாதிகள் பிரச்சினை செய்ததாக சொல்வதால் அது குறித்து நான் புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல, நான் புகார் அளித்தேன், அவ்வாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. 1980ம் ஆண்டு பாக பத்திரத்தின் படி ஏற்கனவே உள்ள வாய்க்காலில் தண்ணீர் கொண்டு செல்வதற்கு 1ம்பிரதிவாதி எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றாலும், எனது மற்றொரு சகோதரரின் பாக சொத்தினை எனது மனைவி பெயரில் விலைக்கு வாங்கியதால் அந்த வாய்க்காலை விடுத்து வேறொரு வாய்க்கால்கோருவதற்கு அந்த பாகபத்திரத்திலும் இடமில்லை, சட்டத்திலும் இடமில்லை என்றால் சரியல்ல.

5. சர்வே எண்.203/4Cல் கிணறும், மின் இணைப்பும் எங்கள் 3 சகோதரருக்கும் பொதுவானது என்றாலும், மீதமுள்ள இடம் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல, மொத்த விஸ்தீரணமான 17 செண்டில் கிணறு அதனுடன் மண் கொட்டுவதற்காக இணைந்த காலியிடம் 6 செண்டு ஆகியவை மட்டும் மூவருக்கும் பொதுவானது, மீதமுள்ள இடம் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது. எனது சகோதரர் 1ம் பிரதிவாதி எனக்கெதிராக அசல் வழக்கு எண்.91/2018 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கிற்கு பின்புதான், நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், மின் இணைப்பினை 1ம் பிரதிவாதி பெயருக்கு மாற்றியதால்தான், நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். மின் இணைப்பு 1ம் பிரதிவாதி பெயரில் சுமார் 30 ஆண்டுகளாக உள்ளது என்றால் சரியல்ல, 2008ம் ஆண்டுதான் அவர் மாற்றி உள்ளார். 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தினை நான் கிரையம் கேட்டதால் அவர் கொடுக்க மறுத்ததாலும், நான் எனது மற்றொரு சகோதரரின் பாக சொத்தினை கிரையம் பெற்றதாலும் இந்த வழககினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.